# பயங்கரவாதத்தை எதிர்கொள்வதிலிருந்து மீளுவது வரை: சர்வதேச அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொண்டவை

*ஆக்கம் - அடம் கொலின்ஸ் மற்றும் மலிந்த மீகொட, லக்ஷ்மன் கதிர்காமர் கற்கை நிலையம்*

**பயங்கரவாதத்தை எதிர்கொள்வதிலிருந்து மீளுவது வரை: சர்வதேச அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொண்டவை எனும் தலைப்பில் இடம்பெற்ற குழுநிலை கலந்துரையாடல் நிகழ்விலிருந்து மூன்று முக்கியமான அம்சங்கள்**

1. **முன்னரை விடவும் அதிக தீவிரமான மற்றும் பரவக்கூடிய புதிய வடிவத்திலான பயங்கரவாதத்திற்கு உலகு முகங்கொடுத்துள்ளதுடன், அதன் காரணமாக இதனை கண்காணித்துக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக உள்ளது.**
2. **பயங்கரவாதத்தை எதிர்கொள்வதில் திறன்மிக்க மூலோபாயங்களுக்கு பாதுபாப்பை உறுதிப்படுத்தும் தேவையை தீர்த்துவைக்கும் வகையில் விரிவான மற்றும் இடைநிலை அணுகுமுறை தேவைப்படுவதுடன், சட்ட விதிகளைப் பாதுகாத்து, வன்முறை தீவிரவாத்தின் மூல காரணங்களுக்கு தீர்வு காண வேண்டியது அவசியமாகும்.**
3. **பயங்கரவாதம் காரணமாக அதிகரித்து வருகின்ற ஆபத்திற்கு தீர்வு காண்பதில் ஏனைய நாடுகளின் அனுபவங்களிலிருந்து கற்றுக்கொண்டவற்றை இலங்கை உள்வாங்கி நடைமுறைப்படுத்த முடிவதுடன், உள்நாட்டு நிலைமைகளுக்கு உகந்த கொள்கைகளையும் உள்வாங்குதல் வேண்டும்.**

---

**அறிமுகம்**

- லக்ஷ்மன் கதிர்காமர் கற்கைநிலையமானது இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் உதவியுடன் 2019 ஜுலை 10 அன்று ‘‘பயங்கரவாதத்தை எதிர்கொள்வதிலிருந்து மீளுவது வரை: சர்வதேச அனுபவத்தின் மூலமாக கற்றுக்கொண்டவை’’ எனும் தலைப்பில் குழுநிலை கலந்துரையாடல் நிகழ்வொன்றை நடாத்தியுள்ளது.
- கலந்துரையாடல் குழுவில் இடம்பெற்ற பேச்சாளர்கள்: கலாநிதி டாட் சி. ஹெல்மஸ், நடத்தைசார் சிரேஷ்ட விஞ்ஞானி, Rand Corporation; திரு. ஜோன் ரீ. கொட்∴பிறீ, பிராந்திய மற்றும் பலதரப்பு விவகாரங்களுக்கான பிரதி இணைப்பாளர், பயங்கரவாத மற்றும் வன்முறை தீவிரவாத எதிர்ப்பு இலாகா, அமெரிக்க இராஜாங்க திணைக்களம்; கலாநிதி ராதிகா குமாரசுவாமி, ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் பொதுச் சபை செயலாளர் நாயகத்தின் கீழ் அதிகாரி, சிறுவர் மற்றும் ஆயுத மோதலுக்கான விசேட பிரதிநிதி; மற்றும் கலாநிதி பீ. நந்தலால் வீரசிங்க, சிரேஷ்ட பிரதி ஆளுனர், இலங்கை மத்திய வங்கி. லக்ஷ்மன் கதிர்காமர் கற்கைநிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி கணேஷன் விக்னராஜா அவர்கள் இந்த கலந்துரையாடலை நெறிப்படுத்தியிருந்ததுடன், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான அமெரிக்க தூதுவரான மேன்மைதங்கிய அலினா பி. டெப்லிட்ஸ் அவர்கள் நிறைவுரையை ஆற்றினார்.
- சிரேஷ்ட இராஜதந்திரிகள், ஆயுதப்படைகள் மற்றும் பொலிஸ் படையின் சிரேஷ்ட பிரதிநிதிகள், ஏனைய அரசாங்க அதிகாரிகள், ஊடகப் பிரதிநிதிகள், அரசியல், பொருளாதார வல்லுனர்கள், தனியார் துறை அடங்கலாக 150 இற்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**கலந்துரையாடலின் முக்கியமான விடயங்கள்:**

பாதுகாப்பை பலப்படுத்தல்

- அல் கைதா குழுக்களால் பின்பற்றப்பட்ட பாரிய அளவிலான, மையப்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் நெருக்கமான வழியில் ஒருங்கிணைந்த தாக்குதல்களிலிருந்து பாரிய அளவில் வளர்ச்சி கண்ட புதிய வடிவிலான ஒரு பயங்கரவாதத்தை ஐஎஸ்ஐஎஸ் பின்பற்றி வருவதுடன், சிறு எண்ணிக்கையானவர்களால் நன்கு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளாக மாற்றம் கண்டுள்ள நிலையில், அடிக்கடி நிகழ்த்தப்படுகின்றவையாகவும் மாறியுள்ளன. ஆகவே அத்தகையவர்களை கண்காணித்து, கட்டுப்படுத்துவது மிகவும் சிரமமாக உள்ளது.
- அதிகரித்துச் செல்லும் இந்த அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு மென் மற்றும் வன் அணுகுமுறைகளின் இணைப்பு தேவைப்படுகின்றது என்பதை அமெரிக்க மற்றும் வட ஆபிரிக்க அனுபவங்கள் எடுத்துரைக்கின்றன.
    - வன் அணுகுமுறையின் கீழ், வழக்கமான சட்ட அமுலாக்கம், புலனாய்வுத் திரட்டல் மற்றும் எல்லைக் கட்டுப்பாட்டு அதிகார அமைப்புக்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு ஆகியவற்றைப் பலப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.
    - மென் அணுகுமுறையின் கீழ், குறிப்பாக ஆபத்திற்கு உள்ளாகக்கூடிய இளைஞர்,யுவதிகள் மத்தியில் தீவிரவாதத்தை விதைத்தல், அணிதிரட்டல் மற்றும் ஆட்சேர்ப்பைத் தடுப்பதற்கு சமூகத் தலைவர்களின் நெருக்கமான ஈடுபாடு தேவைப்படுகின்றது.
- சிறுபான்மைச் சமூகங்கள் தமது நலனுக்கு தீங்கு கிடையாது என்ற உணர்வைக் கொண்டிருக்கும் வகையில் இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறைகள் சீர்செய்யப்படுதல் வேண்டும்.
- வன்முறை தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்நாட்டு மட்டத்தில், குறிப்பாக சிவில் சமூக குழுக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களினூடாக முன்னெடுக்கப்படுகின்ற போது மிகுந்த பயனளிக்கின்றன என சர்வதேச அனுபவம் நமக்கு காண்பிக்கின்றது.

சமூக ஊடகத்தின் வகிபாகம்

- நியூசிலாந்து, இந்தியா மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் அண்மையில் இடம்பெற்ற தீவிரவாத தாக்குதல்களைத் தொடர்ந்து, தீவிரவாத சிந்தனைகளை பரப்புகின்ற குழுக்கள் மற்றும் நபர்களை நீக்குவது அடங்கலாக, சமூக ஊடக நிறுவனங்கள் சுய கட:டுப்பாடுகளை விதிப்பதில் படிப்படியாக செயல்திறன் வளர்ச்சி கண்டுள்ளன.
- மெய்நிகர் தனியார் வலையமைப்புக்களின் (Virtual Private Networks - VPNs) பிரசன்னம் காரணமாக பயங்கரவாத சம்பவங்களின் போது சமூக ஊடகங்கள் மீது விதிக்கப்படுகின்ற தடைகள் அல்லது முடக்கங்கள் பயனற்றுப் போகக்கூடும். மேலும், அவ்வாறு நீண்ட காலத்திற்கு தடை செய்வதால் டிஜிட்டல் பொருளாதாரமும் பாதிக்கப்படக்கூடும். இதன் பிரகாரம், ஜனநாயக கோட்பாடுகளுடன் இணங்குகின்ற வகையில் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது குறிப்பிட்ட இலக்குடன் அவ்வாறான கட்டுப்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.
- பயங்கரவாதத்தால் எழுகின்ற நெருக்கடி நிலைமைகளின் போது தவறான தகவல்கள் பரப்பப்படுவதை தடுத்து, சட்டத்தை நிலைநாட்டுவதற்கு அரசாங்கங்கள் தமது தொடர்பாடல் மார்க்கங்களை மேம்படுத்த வேண்டும்.

- சமூக ஊடகத்தின் வாயிலாக பரப்பப்படுகின்ற தகவல்களின் உண்மைத் தன்மையை தீர்மானிப்பதற்கு தனிநபர்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கு உதவும் வகையில் உள்நாட்டில் ஆற்றல் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

ஆட்சி முறை

- பயங்கரவாதத்தை எதிர்கொள்ளல் என்ற போர்வையில் ஜனநாயக உரிமைகள் தேவையற்ற விதத்தில் வரம்பை மீறாமல் இருப்பதை உறுதி செய்வதற்கு சமூகங்கள் விழிப்புடன் செயற்படுதல் வேண்டும். உதாரணத்திற்கு, விதிவிலக்கு நிலை (சட்ட ஆட்சியை மீறும் திறன்) நெருக்கடி நிலைமையின் போது தேவையான அளவை மீறுவதாக அமையக்கூடாது.
- நீதி தன்னிச்சையாக முன்னெடுக்கப்படுவதைத் தடுத்து, பயங்கரவாதிகளிடமிருந்து பொதுமக்களை வேறுபடுத்துவதற்கு பாரிய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.
- பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் முயற்சிகள் தொடர்பான பாதுகாப்பு ஏற்பாடுகள் தனியாக முன்னெடுக்கப்பட முடியாதவை என வட அயர்லாந்து மற்றும் தென்னாபிரிக்கா அனுபவங்கள் காண்பிக்கின்றன. தீவிரவாத சிந்தனைகளை விதைத்தல் மற்றும் வன்முறை தீவிரவாதத்திற்கு தீர்வு காண்பதற்கு அரசியல், பொருளாதார மற்றும் சமூக கொள்கைகளுடன் சேர்ந்ததாக முயற்சிகள் அமைதல் வேண்டும்
- மதங்கள் மற்றும் இனங்களுக்கு இடையில் அதிகரித்த அளவில் ஒற்றுமை உணர்வை கட்டியெழுப்புவதே முக்கியமான சவாலாக உள்ளது. இதற்கு நியாயமான மற்றும் திறன்மிக்க நீதி முறைமை தேவை.

அதிர்ச்சிகளிலிருந்து பொருளாதார மீள்எழுச்சியைக் கட்டியெழுப்புதல்

- பயங்கரவாத தாக்குதல்கள் பொருளாதார செயற்பாடுகளுக்கு கணிசமான அளவில் பாதகமான விளைவை ஏற்படுத்தலாம். உதாரணத்திற்கு, 2002 ஆம் ஆண்டு பாலியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் அங்கு சுற்றுலாத்துறைக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. உயிர்த்தெழுந்த ஞாயிறு தின தாக்குதல்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் பாதகமான அதிர்வை ஏற்படுத்தியுள்ளன. எனினும், நிதியியல் சந்தைகளிலோ அல்லது எதிர்வரும் கடன் மீள்கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் அரசாங்கத்தின் ஆற்றலிலோ பாரிய தாக்கம் ஏதும் ஏற்படவில்லை.
- உடனடி பொருளாதார வீழ்ச்சியை சமாளிக்க, வர்த்தகத் தொடர்ச்சி சார்ந்த திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை இத்தகைய வெளி அதிர்ச்சி காண்பிக்கின்றது. 1996 ஆம் தனது தலைமையகத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலைத் தொடர்ந்து அத்தகைய திட்டங்களை இலங்கை மத்திய வங்கி பேணி வருவதுடன், நிதித்துறையில் அது தற்போது நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ளது.
- எதிர்பாராத நிகழ்வுகளைச் சமாளிக்கும் வகையில் நிதி மற்றும் பணவியல் கொள்கைகளை உறுதி செய்து, கடன் மீள்கொடுப்பனவுகளை உறுதி செய்வதற்கு நாட்டில் பொருளாதாரத் தீர்வுத்திட்டங்கள் போதுமான அளவில் பேணப்படுவது மிகவும் முக்கியம்.

இலங்கையில் இது தொடர்பான செயற்பாடுகள்

- புலனாய்வுத் தகவல் சேகரிப்பு மற்றும் தகவலைப் பகிரும் நடைமுறைகளை பலப்படுத்துவது இலங்கையில் அதிகரித்து வருகின்ற பயங்கரவாத அச்சுறுத்தலைக்

கட்டுப்படுத்துவதற்கு மிகவும் அவசியம். தீவிரவாத சிந்தனையை விதைப்பதைத் தடுப்பதற்காக சமூக மட்டத்தில் நெருக்கமான இடைத்தொடர்பாடல்களையும் அதனுடன் இணைத்துக் கொள்ள வேண்டும்.

- இலங்கை போன்ற நாடுகள், அதுவும் குறிப்பாக உள்நாட்டு மொழிகளில் இடம்பெறும் தகவல் பரிமாற்றங்களை கவனத்தில் கொள்ளத் தவறுவதைப் போக்கும் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு அதிக வளங்களை ஒதுக்குவதை சமூக ஊடக நிறுவனங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். தவறான தகவலைப் பரப்புவதை தவிர்ப்பதை உறுதி செய்வதற்கு உள்நாட்டு ஊடக நிறுவனங்களும் முக்கிய பங்கு வகித்தல் வேண்டும்.
- ஒரு உயர் நடுத்தர வருமான நாடு என இலங்கை மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளமையால், அது தொடர்ந்தும் விவேகமான பொருளாதார நிர்வாகத்தை மேற்கொண்டு, தேவையான கட்டமைப்பு சீர்திருத்தங்களை படிப்படியாக முன்னெடுத்தல் வேண்டும். பயங்கரவாதத்தால் தூண்டப்படும் சீர்குலைவுகள் அடங்கலாக, எதிர்காலத்தில் ஏற்படும் அதிர்ச்சிகளிலிருந்து பொருளாதாரம் மீள்எழுச்சி அடைவதை உறுதி செய்வதற்கு இது உதவும்.

---

**அடம் கொலின்ஸ் அவர்கள் கொழும்பிலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் சர்வதேச உறவுமுறைகள் மற்றும் மூலோபாய கற்கைகளுக்கான கற்கைநிலையத்தில் ஆய்வாளராக (Research Fellow) உள்ளார். மலிந்த மீகொட அவர்கள் லக்ஷ்மன் கதிர்காமர் கற்கைநிலையத்தில் இணை ஆய்வாளராக (Research Associate) ஆக உள்ளார். லக்ஷ்மன் கதிர்காமர் கற்கைநிலையத்தில் இடம்பெறும் நிகழ்வுகளின் முக்கிய சாராம்சங்களே லக்ஷ்மன் கதிர்காமர் கற்கைநிலையத்தின் முக்கிய விடயங்களாக அமைந்துள்ளன. ஆகவே, இந்த கருத்துக்கள் அறிக்கையை வெளியிடுகின்றவர்களின் அல்லது லக்ஷ்மன் கதிர்காமர் கற்கைநிலையத்தின் கருத்துக்கள் அல்ல என்பதுடன், நிகழ்வின் முழுமையான அறிக்கை அல்ல.*

**இது சார்ந்த ஆக்கங்கள்:**


Wignaraja, G. (2019). *Five Key Policy Lessons from the Terror Attacks in Sri Lanka.* Lakshman Kadirgamar Institute. [Online] Available at: https://www.lki.lk/blog/five-key-policy-lessons-from-the-terror-attacks-in-sri-lanka/

Meegoda, M. (2019). *Developing a '3C' Security Strategy for Sri Lanka.* Lakshman Kadirgamar Institute. [Online] Available at: https://www.lki.lk/blog/developing-a-3c-security-strategy-for-sri-lanka/

Hussain, N. (2019). *4/21 and the Way Forward for Sri Lanka's Social Media Landscape.* Lakshman Kadirgamar Institute. [Online] Available at: https://www.lki.lk/blog/4-21-and-the-way-forward-for-sri-lankas-social-media-landscape/

Helmus, T., and Klein, K. (2018). *Assessing Outcomes of Online Campaigns Countering Violent Extremism. Rand Corporation.* [Online] Available at: https://www.rand.org/pubs/research_reports/RR2813.html

Collins, A. (2019). *Should Sri Lanka Stick with the IMF?* Lakshman Kadirgamar Institute. [Online] Available at: https://www.lki.lk/blog/should-sri-lanka-stick-with-the-imf/